## மூன்றாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 100

வகுப்பு - எட்டு - ____________

நேரம்: 2½ மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** **10 × 1 = 10**

1. பிறிது மொழிதல் அணியில் ______________ மட்டும் இடம் பெறும்.

அ) உவமை ஆ) உவமேயம் இ) தொடை ஈ) சந்தம்

2. சிங்கம் ______________ யில் வாழும்.

அ) மாயை ஆ) ஊழி இ) முழை ஈ) அலை

3. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ______________

அ) இராதாகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்
இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

4. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ______________

அ) திருச்சி ஆ) மதுரை இ) சென்னை ஈ) கோவை

5. கவலைகள் ______________ அல்ல.

அ) சுமைகள் ஆ) சுவைகள்
இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்

6. 'உள் + இருக்கும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்______________

அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும்
இ) உளிருக்கும் ஈ) உளருக்கும்

7. நாம் நீக்க வேண்டியவற்றுள் ஒன்று ______________

அ) பொச்சாப்பு ஆ) துணிவு இ) மானம் ஈ) எளிமை

8. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது ______________

அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்

9. வறுமை வந்த காலத்தில் ______________ குறையாமல் வாழ வேண்டும்.

அ) இன்பம் ஆ) தூக்கம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

10. பூனா ஒப்பந்தம் ______________ மாற்ற ஏற்படுத்தப்பட்டது.

அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை
இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமையை

II. **பொருத்துக.** 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 11. | இன்பம் தருவது | - | நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம் |
| 12. | நட்பு என்பது | - | குன்றிமணியளவு தவறு |
| 13. | பெருமையை அழிப்பது | - | செல்வம் மிகுந்த காலம் |
| 14. | பணிவு கொள்ளும் காலம் | - | சிரித்து மகிழ மட்டுமன்று |
| 15. | பயனின்றி அழிவது | - | பண்புடையவர் நட்பு |

III. **மனப்பாடப்பாடல்** 4 + 2 = 6

16. “ஒன்றே குலம்” பாடலின் முதல் நான்கு வரிகளை அடிபிறழாமல் எழுதுக.
17. ‘தொடர்பு’ என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

IV. **எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** 7 × 2 = 14

18. எது பெருமையைத் தரும்?
19. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
20. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?
21. எம்.ஜி.ஆர் நாடகத்துறையில் ஈடுபடக் காரணம் என்ன?
22. கவலைகளைக் கவிஞர் மு.மேத்தா எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
23. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?
24. மனிதர்களிடம் உள்ள பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?
25. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?

V. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

26. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
27. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
28. பூமி எப்போது பாதையாகும்?
29. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?

VI. **எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி.** 1 × 5 = 5

30. “அறிவுசால் ஔவையார்” – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.
31. பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

VII. **கட்டுரை வரைக.** 1 × 10 = 10

32. “உழைப்பே உயர்வு“ என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

VIII. **பிழைகளை திருத்தி எழுதுக.** 5 × 1 = 5

33. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.
34. அதைச் செய்தது நான் அன்று.
35. பகைவர் நீவீர் அல்லர்.
36. பானையை உடைத்தது கண்ணன் அல்ல.
37. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.

IX. **நிரப்புக. (ர் என முடியும் விடைகளை எழுதுக.)** 10 × 1 = 10

38. தாகத்திற்கு ______________
39. கோவிலின் திருவிழாவில், இறைவன் பவனி வருவது ______________
40. வாழைப்பழங்களைக் கொண்டது ______________
41. உழவனிடம் இருப்பது ______________
42. மழையைக் குறிக்கும் வேறு சொல் ______________
43. கத்தியின் முனை ______________
44. மரம், செடி, கொடிகளை மண்ணுக்கடியில் தாங்குவது ______________
45. தயிர் கடைந்து வருவது ______________
46. பகைவனிடம் மோதுவது ______________
47. உலகம் - வேறு சொல் ______________

X. **வரிசைப்படுத்துக.** 6 × 1 = 6

48. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்.
49. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்கு தெரிவித்தல்.
50. ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
51. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
52. தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்.
53. தொண்டைமானிடம் ஔவை அதியமானின் படைச்சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்.

XI. **இரு பொருள் தருக.** 5 × 2 = 10

54. ஆ
55. அமர்
56. இரவி
57. அரி
58. இன்னல்

**XII. எது சரி? எது தவறு?** 5 × 1 = 5

59. கங்காரு - பின்னோக்கி நடக்கும் ☐ , நடக்காது ☐

60. தக்காளி - படிவகை ☐ , காய்வகை ☐

61. பூசணி - காய் ☐ , பழம் ☐

62. மிளகு - கொடி ☐ , செடி ☐

63. மூங்கில் - புல் வகை ☐ , மரம் ☐

**XIII. கலைச்சொல் தருக.** 5 × 1 = 5

64. Charity
65. Saint
66. Philosophy
67. Integrity
68. Reform